**கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனம் மற்றும் அதன் துணைக் கம்பனி -2020**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 மறுப்பு அபிப்பிராயம்**

கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனம் (கூட்டுத்தாபனம்) மற்றும் அதன் துணைக் கம்பனிகளின் (தொகுதியின்) 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டம் மற்றும் விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக தாபனம் மற்றும் அதன் துணைக் கம்பனிகளின் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க தாபனத்தின் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றை நான் தெரிவிக்கவில்லை.

**1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுப்பிற்குள்ளாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, தாபனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி

இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தாபனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தாபனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- தாபனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- தாபனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- தாபனத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- தாபனத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

- 

**1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 - ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்<br>-------------------------------------------- | | |
| (அ) | நியமத்தின் 51 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்தொன்றின் இறுதி பெறுமதி மற்றும் பயன்தரு ஆயுட்காலம் என்பன குறைந்தது ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியின் போதும் மீளாய்வு செய்ய வேண்டியிருந்ததுடன் எதிர்பார்க்கப்பட்ட நிலைமையில் மேற்கூறப்பட்ட மதிப்பீடுகளில் மாற்றங்கள் ஏற்படுமாயின் அந்த மாற்றங்கள் இலங்கை கணக்கீட்டு நியமம் 8 இன் பிரகாரம் கணக்கீட்டு மதிப்பீடொன்றின் வேறுபாடாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். எனினும், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதியப்பட்ட பெறுமதி ரூபா 458,337,881 ஆன தாபனத்தின் கட்டிடங்கள், குத்தகை காணிகளில் அமைந்துள்ள கட்டிடங்களை அபிவிருத்தி செய்தல், இயந்திர உபகரணங்கள், மோட்டார் வாகனங்கள், தளபாடங்களும் பொருத்திகளும், கணனி துணைப்பாகங்கள், கருவிகள் மற்றும் உபகரணங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் என்பவற்றின் ஆகக்குறைந்த பெறுமதி மற்றும் பயன்தரு ஆயுட்காலம் என்பன மீளாய்வு செய்யப்பட்டிருக்க வில்லை. | தாபனத்திற்குரிய ஆதனங்கள் பல்வேறு பிரதேசங்களில் பரவிக் காணப்படுவதுடன், தளபாடங்கள், கணனி உபகரணங்கள் போன்ற சொத்துக்கள் ஒவ்வொரு ஆண்டின் போதும், மெய்மெய்யாய்வு செய்யப்பட்டு உரிய உறுதிப்படுத்தலை மேற்கொள்ளுதல் பிரயோக ரீதியில் வசதியீனமாகும். 2021 ஆம் ஆண்டில் சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டதன் பின்னர் உரிய உறுதிப்படுத்தல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க முடியும். | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நியமத்தின் 79 (ஆ) பந்தியின் பிரகாரம் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட எனினும் தற்போதும் பயன்படுத்தப்படுகின்ற ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் இழிவுப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டு தற்போதும் பயன்படுத்தப்படுகின்ற தாபனத்திற்குரிய 01 கட்டிடம், 65 இயந்திர உபகரணங்கள், 2455 தளபாடங்களும் பொருத்திகளும், 116 மோட்டார் வாகனங்கள், 42 கருவிகளும் உபகரணங்களும், 309 அலுவலக உபகரணங்கள் மற்றும் 413 கணனிகளினதும் துணைப்பாகங்களினதும் இழிவுப்பெறுமதி என்பன நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | கணக்கு குறிப்பு இலக்கம் 9.3 இன் கீழ் தாபனத்தை உள்ளடக்கிய தொகுதியில் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட நிலையான சொத்துக்களின் கிரயமாக ரூபா 349,095,841 காண்பிக்கப்பட்டுள்ளதுடன், அதில் குறிப்பிடப்படுகின்ற பிரகாரம் தாபனத்தின் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட சொத்துக்களின் கிரயமாக ரூபா 348,956,141 காண்பிக்கப்பட்டுள்ளது. இந்த சொத்துக்களின் இழிவு பெறுமதி 2021 ஆம் ஆண்டின் சொத்துக்களின் மீள்மதிப்பீட்டின் பின்னர் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | இலங்கை கணக்கீட்டு நியமம் 37 - நிதிஏற்பாடு, நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் நிகழத்தக் சொத்துக்கள்<br>-------------------------------------------- | | |
| | நியமத்தின் 31 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனமொன்று நிகழத்தக்க சொத்துக்களை நிதிக்கூற்றுக்களில் இனங்காண வேண்டியிருந்த போதிலும் தாபனத்தால் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி செயற்திட்டத்தின் கீழ் ஏற்பட்ட இருப்பு தொலைந்தமை தொடர்பாக விசாரணையில் காணப்படுகின்ற வழக்கிலிருந்து கிடைக்க | நிறுவனத்தின் உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் வழங்கப்பட்ட அறிக்கையின் அடிப்படையில் தாபனத்தால் அரிசி செயற்திட்டத்தின் கீழ் தொலைந்துபோன அரிசி பொதிகளின் அளவு தொடர்பாக பொது முகாமையாளரால் வழங்கப்பட்ட எழுத்துமூல அறிவித்தலுக்குரிய கணப்பீடு செய்யப்பட்ட கிரயத்தின் பிரகாரம் இந்த | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| வேண்டியதாக எதிர்பார்க்கப்பட்ட ரூபா 25,900,236 தொகை சொத்தாக நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்பட்டிருந்தது. | தொலைந்துபோன பெறுமதி கணக்குகளில் காண்பிக்கப்பட்டுள்ளது. இதற்காக தற்போது குற்றுப்புலனாய்வு திணைக்களத்தில் வழக்கொன்று காணப்படுகின்றமையால் வழக்கிலிருந்து கிடைக்க வேண்டிய மீதியாக இந்த பெறுமதி நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) லங்கா சதொச கம்பனியின் பங்கு பங்களிப்பிற்காக தாபனம் நிதிப் பங்களிப்பை வழங்காதிருந்ததுடன் அதற்காக தாபனத்தால் லங்கா சதொச கம்பனிக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த கட்டிடத்திற்காக 2005 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை திரண்ட வாடகைப் பெறுமதி ரூபா 66,986,483 தொகையும், லங்கா சதொச விற்பனைக் கடைகள் மற்றும் களஞ்சியத்தின் பயன்பாட்டிற்காக தாபனத்தால் வழங்கப்பட்ட நிலையான சொத்துக்களின் பெறுமதியான ரூபா 54,722,228 தொகையும் ஆக ரூபா 121,708,711 தொகை ஈடுசெய்யப்பட்டிருந்தது. அந்த பணம் ஈடுசெய்வதற்காக லங்கா சதொச கம்பனியால் வநிகோகிக்கப்பட்ட பங்குகளின் பெறுமதியான ரூபா 22,798,840 தொகை ஏனைய முதலீடாகவும், மிகுதி ரூபா 98,909,871 தொகை முதலீட்டு | கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்தால் லங்கா சதொசவிற்கு கையளிக்கப்பட்ட பொருட்பதிவேட்டு பொருட்களின் பெறுமதி மற்றும் வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள நிலையான சொத்துக்கள் (களஞ்சியம் மற்றும் விற்பனைக்கடை கட்டிடங்கள்) இற்காக 2011.03.31 வரையான காலத்திற்கான திரண்ட நிலுவை வாடகை பணம் சதொசவினால் லங்கா சதொசவிற்கு முதலீட்டு மூலதனமாக கருதி பங்குகளை விநியோகிப்பதற்கு இலக்கம் 11/1353/540/017 என்ற அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் கிடைத்துள்ளது. மேற்கூறப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தின் படி லங்கா சதொசவினால் சதொசவிற்கு ரூபா | வெளித்தரப்பினரால் இணக்கம் தெரிவிக்கப்படாத பெறுமதியொன்று நிதிக்கூற்றுக்களில் முதலீட்டு முற்பணமாக இனங்காண முடியாது. |

| | | | |
|---|---|---|---|
| | முற்பணமாக நிதிக்கூற்றுக்களில் நீண்டகால சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும், அப்பெறுமதி தொடர்பாக லங்கா சதொச கம்பனியால் இணக்கப்பாடு தெரிவிக்கப்படாதிருந்ததுடன் லங்கா சதொச கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | 22,798,840 தொகையான பங்குகள் விநியோகிக்கப்பட்டமையால் மிகுதி நிலுவைப் பங்கின் அளவினையும் விநியோகிக்குமாறு பல சந்தர்ப்பங்களின் போது அந்த நிறுவனத்திற்கு கோரிக்கை விடப்பட்டிருந்தது. அது தொடர்பாக அந்த நிறுவனத்தால் பதிலளிக்கப்படாமை மற்றும் கணக்கீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையினால் அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | |
| (ஆ) | தலைமை அலுவலகம் மற்றும் சதொச மோட்டர்ஸ் அமைந்துள்ள காணியின் மீள்மதிப்பீட்டு பெறுமதி ரூபா 2,415,000,000 ஆக இருந்த போதிலும் அப்பெறுமதி ரூபா 2,621,600,000 ஆக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக காணி மற்றும் முதலீட்டு ஆதனங்களின் பெறுமதி ரூபா 206,600,000 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த சகல சொத்துக்களும் 2021 ஆம் ஆண்டில் மீள்மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் 2021 ஆம் ஆண்டு முதல் சரியாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | சொத்துக்களின் மீள்மதிப்பீட்டுப் பெறுமதி கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (இ) | மாத்தறையில் அமைந்துள்ள 2944 சதுர அடி அளவான களஞ்சியத்தின் மீள்மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 3,532,800 ஆக இருந்த போதிலும் அது ரூபா 1,177,600 ஆக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக நிதிக்கூற்றுக்களில் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 2,355,200 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்த சொத்துக்கள் தொடர்பாக ஆண்டிற்குரிய பெறுமானத் தேய்வு ரூபா 306,176 | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | மீள்மதிப்பீட்டு பெறுமதி ரூபா 112,943,520 ஆன ஹிங்குரக்கொடயில் அமைந்துள்ள கட்டிடமொன்றை அபிவிருத்தி செய்வதற்குரிய 15 விடயங்களில் ரூபா 68,868,000 ஆக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக கட்டிடத்தை அபிவிருத்தி செய்யும் கணக்கின் மீதி ரூபா 44,075,520 இனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஆண்டின் பெறுமானத்தேய்வு பெறுமதி ரூபா 1,763,021 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் திரண்ட பெறுமானத் தேய்வு ஒதுக்க மீதி ரூபா 10,576,125 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (உ) | நிலையான வைப்பு மற்றும் காலரீதியான வைப்புக்களுக்காக மீளாய்வாண்டிற்குரியதாக கிடைக்க வேண்டிய வட்டி வருமானம் ரூபா 1,090,162 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2015 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட ரூபா 1,100,000 பெறுமதியான காலரீதியான வைப்புக்கள் 2022.08.15 ஆந் திகதி பணமாக்கப்பட்டு மீண்டும் நிலையான வைப்புக் கணக்கொன்றில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. அதன் போது இந்த வைப்பிற்காக கிடைத்த மொத்த வட்டித் தொகையாக ரூபா 365,636.98 எங்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. 2022 ஆம் ஆண்டிற்காக ரூபா 31,048.50 தொகையும், 2015 முதல் 2021 ஆம் ஆண்டுகளுக்காக ரூபா 334,588.48 தொகையும் ஆக 2022 ஆம் ஆண்டின் போது இது சரியாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | ஆண்டிற்குரிய கிடைக்க வேண்டிய வட்டி வருமானம் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | மீளாய்வாண்டின் போது உள்நாட்டு செயற்திட்டத்திற்குரிய அரிசியில் இருந்து பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத அரிசி கிலோ கிராம் 61,108 இனை விற்பனை செய்ததால் கிடைத்த ரூபா 3,755,520 தொகை உள்நாட்டு அரிசி செயற்திட்டத்திற்குரிய வருமானமாக கணக்கீடு செய்யப்படாமல் தாபனத்தின் ஏனைய வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக உள்நாட்டு அரிசி செயற்திட்டத்தின் நட்டம் அப்பெறுமானத்தால் அதிரகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | விலங்கு உணவாக விற்பனை செய்யப்பட்ட அரிசி இந்த செயற்திட்டத்தின் ஏனைய வருமானமாக இனங்காணப்பட்டிருந்துடன் அது இந்த செயற்திட்டத்திலிருந்து அகற்றப்பட்டு தனியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த செயற்திட்டத்தின் இலாபம் 2021 ஆம் ஆண்டின் கணக்குகளில் முன்னைய ஆண்டிற்காக தயாரிக்கின்ற நிரலில் சரியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | வருமானங்கள் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (எ) | இனங்காணப்படாத வைப்பு ரூபா 8,684,772 மீளாய்வாண்டில் பெறவேண்டிய வாடகை மீதியாக குறைத்து காண்பிக்கப்பட்டமை மற்றும் அந்த மீதியில் உள்ளடக்கப்பட்ட ரூபா 3,845 ஆன மறை மீதியின் காரணமாக பெறவேண்டிய வாடகை மீதி ரூபா 8,688,617 குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | அந்த காசு வியாபார வருமானமாக கிடைத்த பணமாக இல்லாதிருந்தமையாலும், வாடகை கடன்பட்டோர் மீதிகளில் முன்னைய ஆண்டிற்காக பெறப்பட வேண்டிய கடன் மீதி காண்பிக்கப்பட்டமையாலும், இந்த பணம் வாடகை கடன்பட்டோர் மீதியில் இருந்து அகற்றப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ளது. | வங்கி நடைமுறை கணக்கிற்கு கிடைக்கின்ற நேரடி அனுப்புதல்களை இனங்கண்டு சரியாக கணக்குகளில் குறிப்பிடல் வேண்டும். |
| (ஏ) | முன்னைய ஆண்டுகளுக்கு உரியதாக செலுத்தப்பட்ட ரூபா 367,200 ஆன மிகை ஊதிய படி மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் செலவினம் மற்றும் நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்புக்கள் அப்பெறுமானத்தால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டில் மிகை ஊதிய படி கணக்கில் ரூபா 367,200 ஆன முன்னைய ஆண்டின் மிகை ஊதிய படிக்காக செலுத்தப்பட்ட நிலுவை கொடுப்பனவொன்று உள்ளடக்கப்பட்டுள்ளது. இதற்காக 2019 ஆம் ஆண்டில் ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்படாதிருந்தது டன், கொடுக்கல் வாங்கல்களின் பொருண்மையான தன்மையை கவனத்தில் | முன்னைய ஆண்டிற்குரியதாக செலுத்தப்பட்ட செலவினங்கள் மீளாய்வாண்டின் செலவினமாக இனங்காண முடியாது. |

| | | | |
|---|---|---|---|
| | | கொண்டு நடப்பாண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | |
| (ஐ) | 2015 முதல் மீளாய்வாண்டு வரை முன்கொண்டு வரப்படுகின்ற ரூபா 3,129,264 ஆன கையிலுள்ள காசு மீதி பௌதீக ரீதியில் காணப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | அதற்குரிய விரிவான தகவல்களை கண்டறிய முடியாதுள்ளது. எனினும், எதிர்காலத்தின் போது இது தொடர்பாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவிற்கு அறிவிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், அதன் போது கிடைக்கின்ற ஆலோசனையின் படி மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற காசு மீதி பௌதீக ரீதியில் காணப்படல் வேண்டும். |
| (ஒ) | காசு மற்றும் காசுக்கு சமமானவைகளின் மீதியில் 13 பிரதேச அலுவலகங்களுக்குரிய ரூபா 1,139,783 கூட்டுத் தொகையான செலவு மீதி உள்ளடக்கப்பட்டதன் காரணமாக காசு மற்றும் காசுக்கு சமமானவைகளின் மீதி அப்பெறுமானத்தால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த பேரேட்டு கணக்குகள் பரீட்சிக்கப்படுவதுடன், 2021 ஆம் ஆண்டின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காசு மற்றும் காசுக்கு சமமானவைகளின் மீதியில் உள்ளடக்கப்பட்ட செலவு மீதியை பகுப்பாய்வு செய்து சரியான மீதி நிதிக் கூற்றுக்களின் காண்பிக்கப்படல் வேண்டும். |
| (ஓ) | போக்குவரத்து வருமானத்திற்கு உரிய இரத்துச் செய்யப்பட்ட விற்பனை பட்டியல்கள் தொடர்பாக கணக்கு வைக்கும் போது ஏற்பட்ட வழுக்களை சரிசெய்யும் போது பெறுமதி சேர்க்கப்பட்ட வரி ஏற்பாட்டு கணக்கில் நீக்கப்பட வேண்டிய ரூபா 2,280,006 போக்குவரத்து வருமான கணக்கில் அகற்றப்பட்டதன் காரணமாக அப்பெறுமானத்தால் போக்குவரத்து வருமானம் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த தவறும் 2021 ஆம் ஆண்டில் சரிசெய்து கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | வழுக்களை சரிசெய்யும் போது கணக்குகளில் சரியாக சீராக்குதல் வேண்டும். |
| (ஔ) | தாபனத்தின் கிரய நிலையமொன்றான | இந்த சமர்ப்பித்தலின் வழுக்கள் 2021 ஆம் | கிரய நிலையங்களின் |

| | | | |
|---|---|---|---|
| | போக்குவரத்து பிரிவின் இலாபம்/ நட்டம் கணிப்பிடும் போது முறையே ரூபா 57,511,257 மற்றும் ரூபா 25,061,462 ஆன போக்குவரத்து பிரிவின் ஊழியர் சம்பளம் மற்றும் போக்குவரத்து வருமானத்தை உழைப்பதற்காக ஈடுபடுத்தப்பட்ட வாகனங்களுக்குரிய எரிபொருள் செலவினங்கள் என்பன கவனத்தில் கொள்ளாமையின் காரணமாக ரூபா 72,409,444 ஆன நட்டம் மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களின் ரூபா 10,163,275 இலாபமாக காண்பிக்கப்பட்டிருந்தது. | ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் சரிசெய்து சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இலாபம்/ நட்டம் சரியாக இனங்காணப்படல் வேண்டும். |
| (க) | மீளாய்வாண்டில் அமுல்படுத்தப்பட்ட விஷேட கொவிட் செயற்பாட்டு செயற்திட்டத்தின் நட்டமான ரூபா 16,014,339 இனை அறவிட வேண்டிய தரப்பினர் தொடர்பாக குறிப்பாக இனங்காணப்படாமல் பெற வேண்டிய மீதியாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும், அந்த செயற்திட்டத்தின் விற்பனை வருமானம் வங்கியில் இடப்பட்ட ரூபா 1,193,128 ஆன வட்டி வருமானம் செயற்திட்ட நட்டத்தை கணிப்பிடும் போது கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நட்டத்தை உரிய தரப்பினரிடம் இருந்து அறவிடும் வரை பெறவேண்டிய கணக்கொன்றின் கணக்கீடாக பணிப்பாளர் சபை மற்றும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டத்தின் போது வழங்கப்பட்ட ஆலோசனையின் படி இந்த சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களின் நட்டம் இலாப நட்டக் கணக்கில் கணக்கீடு செய்யப்படுமாயின் அந்த நட்டம் 2020 ஆம் ஆண்டின் போது ஈடுசெய்யப்படுகின்ற மையால் பணிப்பாளர் சபை தீர்மானம் மற்றும் கணக்காய்வு முகாமைத்துவ குழு தீர்மானத்தின் பிரகாரம் செயற்படுவதற்கு முடியாதிருந்தது. இந்த நட்டத்தை பொறுப்பு வாய்ந்த தரப்பினரை | அறவிட வேண்டிய தரப்பினர் தொடர்பாக குறிப்பாக இனங்காணப்படாத நட்டம் பெறவேண்டிய மீதியாக கணக்கீடு செய்ய முடியாது. |

| | | | |
|---|---|---|---|
| | | இனங்கண்டதன் பின்னர் இந்த பணத்தை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். | |
| (கா) | சில கடன்பட்டோர் மீதி மற்றும் கடன்கொடுத்தோர் மீதி நிதிக்கூற்றுக்களில் மறை மீதியாக காண்பிக்கப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதி முறையே ரூபா 33,149,135 மற்றும் ரூபா 21,033,488 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த மீதி 2017 – 2019 ஆம் ஆண்டுகளில் அரிசி கொள்வனவு செய்வதற்காக கொள்வனவாளர்களுக்கு மேலதிகமாக செலுத்தப்பட்ட மீதியாகும். அந்த மீதி வருமானமாக இனங்காண்டு ஒதுக்கீடு செய்வதற்காக தேவையான அங்கீகாரத்தை பெற்று எதிர்வரும் நிதிக் கூற்றுக்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த தகவல்கள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அதன் போது வழங்கப்பட்ட ஆலோசனையின் பிரகாரம் மிகுதி நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | மறை மீதியாக காண்பிக்கப் பட்டுள்ள கடன்கொடுத்தோர் மீதி மற்றும் கடன்பட்டோர் மீதிகளை பகுப்பாய்வு செய்து சரியான மீதியை நிதிக்கூற்றுக்களில் காண்பித்தல் வேண்டும். |

**1.5.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

| | விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | நேரொத்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | | |
| (அ) | வாடகை வருமானம் | 265,489,302 | 258,585,967 | 6,903,335 | 2021 ஆம் ஆண்டு முதல் சரியான பதிவேட்டை சமர்பிப்பதற்கு தேவையான ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிதிக் கூற்றுக்களின் பிரகாரமான பெறுமதி நேரொத்த அறிக்கையின் பிரகாரமான பெறுமதியுடன் இணக்கஞ் செய்யப்பட |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | ல் வேண்டும். |
| (ஆ) | லங்கா சதொச கம்பனியில் இருந்து தாபனத்திற்கு அறவிட வேண்டிய தொகை | 2,290,445,474 | 1,924,384,456 | 366,061,018 | லங்கா சதொச கம்பனிக்கு மீதி உறுதிப்படுத்தல் கடிதம் அனுப்பப்பட்டிருந்த போதும், அதற்காக அவர்களினால் பதிலொன்று தாபனத்திற்கு அனுப்பப்பட்டிருக்க வில்லை. அதனால் மீதி உறுதிப்படுத்தல் நடவடிக்கைகளை செய்ய முடியாதிருந்தது. எதிர்வரும் கணக்காண்டின் போது மீதி உறுதிப்படுத்தல் களைப் பெற்று இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக் கூற்றுக்களின் பிரகாரமான பெறுமதி நேரொத்த அறிக்கையின் பிரகாரமான பெறுமதியுடன் இணக்கஞ் செய்யப்படல் வேண்டும். |

**1.5.4 ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களை தயாரித்தல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தாபனத்தின் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது துணைக் கம்பனியான வ/ப சீடபிள்யூஈ செகியுரிட்டீஸ் என்ட் ஜெனரல் கம்பனி மற்றும் வ/ப சீடபிள்யூஈ கன்ஸ்ட்ரக்ஷன் அன்ட் இன்ஜினியரிங் கம்பனி என்ற கம்பனிகளின் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்படாத மற்றும் கணக்காய்விற்கு உட்படுத்தப்படாத நிதிக்கூற்றுக்கள் பயன்படுத்தப்பட்டிருந்தது. | வ/ப சதொச பாதுகாப்பு (பொது) கம்பனிக்கு பணிப்பாளர் சபை அங்கீகாரத்தை பெற்று நிதி அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. அதனால் எதிர்காலத்தில் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தை பெற்று ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட துணைக் கம்பனிகளின் கணக்குகள் பயன்படுத்தப்படல் வேண்டும். |

### 1.5.5 தாபனத்தின் தொடர்ச்சியான இருப்பு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் தாபனத்தின் மொத்த சொத்துக்களை விஞ்சிய மொத்தப் பொறுப்புக்கள் ரூபா 2,941,269,573 ஆகவும், நடைமுறைச் சொத்துக்களை விஞ்சிய நடைமுறைப் பொறுப்புக்கள் ரூபா 1,089,127,686 ஆகவும் இருந்ததுடன் அதன் காரணமாக கம்பனிக்கு தமது சொத்துக்களிலிருந்து அதன் பொறுப்புக்களுக்கு முகங்கொடுக்கும் இயலுமை மற்றும் திறைசேரி நிதி ஏற்பாட்டினை வழங்காமல் தொடர்ச்சியாக நடாத்திச் செல்லும் இயலுமை நிச்சயமற்ற நிலைமையில் காணப்பட்டது. | ஏற்றுக்கொள்கின்றோம். இறக்குமதி செய்யப்பட்ட அரிசி செயற்திட்டத்திற்காக மக்கள் வங்கியில் இருந்து பெற்ற கடன் பணம் மற்றும் அதன் அடிப்படையில் கூட்டுச்சேர்ந்த வட்டியினால் தாபனத்தின் பொறுப்புக்களை சொத்துக்களுடன் ஒப்பிடுகையில் உயர் பெறுமதியைக் கொண்டிருந்தது. 2021 ஆம் ஆண்டு முதல் இந்தக் கடன் தொகையில் ரூபா 3.6 பில்லியன் பங்கு மற்றும் அந்த வட்டித் தொகை என்பன பொதுத் திறைசேரியிலிருந்து அமைச்சு ஊடாக தாபனத்திற்கு வழங்கப்படுவதுடன் 2021 ஆம் ஆண்டின் யூலை மாதம் முதல் இது வரை தொடர்ச்சியாக அந்த பணம் மக்கள் வங்கிக்கு செலுத்தப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக கடன் தொகையில் எஞ்சிய பணமான ரூபா 2.1 பில்லியனுக்காக லங்கா சதொச நிறுவனத்தால் கொள்வனவு செய்யப்பட்ட அரிசிக்காக தாபனத்திற்கு செலுத்த வேண்டிய பணம் 2022 செப்தெம்பர் மாதம் முதல் ரூபா 25 மில்லியன் வீதம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இந்த கடன் தொகை குறைவடைந்ததன் காரணமாகவும், 2021 ஆம் ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட | தாபனத்தின் பொறுப்புக்களுக்கு முகங்கொடுக்க கூடிய வகையில் சொத்து நிலைமை பேணிச் செல்லப்படல் வேண்டும். |

சொத்துக்களின் மீள்மதிப்பீட்டின் மூலமும் நிறுவனத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் உரிய பிரகாரம் முகாமைத்துவம் செய்ய முடியும் என எதிர்பார்க்கின்றோம்.

### 1.5.6 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| | விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (i) | வழக்குகளில் இருந்து கடைக்க வேண்டிய மீதி | 25,900,236 | பெறுமதி உறுதிப்படுத்தும் ஆவணங்கள் | இதற்காக தற்போது குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் வழக்கொன்று காணப்படுவதால் வழக்கிலிருந்து கிடைக்க வேண்டிய மீதியாக இப்பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக உறுதிப்படுத்தும் கடிதம் வங்கியில் கோரப்பட்டுள்ளதுடன் அந்த உறுதிப்படுத்தல் கிடைத்தவுடன் கணக்காய்விற்கு அனுப்புமாறு ஆலாசனை வழங்கப்பட்டுள்ளது. | உரிய சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ii) | திறைசேரிக்கு செலுத்த வேண்டிய மீதி | | | | |
| - | கடன் தீர்த்தல் | 98,718,402 | பெறுமதி உறுதிப்படுத்தும் ஆவணங்கள் | இது தொடர்பில் உறுதிப்படுத்தும் கடிதம் மக்கள் வங்கிலிருந்து கோரப்பட்டுள்ளதுடன் அந்த உறுதிப்படுத்தல் கிடைத்தவுடன் கணக்காய்விற்கு அனுப்பப்படும். | -மேற்படி- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| - | கடன் மறுசீரமைப்புக் கள் | 275,000,000 | பெறுமதி உறுதிப்படுத்தும் ஆவணங்கள் | 2016 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட இந்த கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான பெறுமதியை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் சதொச நிதிப் பிரிவில் காணப்பவில்லை. | பெறுமதியை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் நிதிப் பிரிவினால் பேணிச் செல்லப்பட வேண்டும். |
| - | சதொச சில்லறை கம்பனி (SRL) | 655,000,000 | பெறுமதி உறுதிப்படுத்தும் ஆவணங்கள் | 2003 ஆம் ஆண்டில் சதொச சில்லறைக் கம்பனி கலைக்கப்பட்டிருந்தது டன், இந்த மீதியில் 2003 ஆம் ஆண்டு முதல் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுகின் றது. தற்போது 18 வருடங்களுக்கு முன் இடம் பெற்ற இந்த கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான பெறுமதியை உறுதிப்படுத்துவதற்கா க நிதிப் பிரிவிடம் உள்ள ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது | உரிய சான்றுகள் கணக்காய்விற்கு ச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| - | வங்கி பொறுப்புக்கள் | 225,000,000 | பெறுமதி உறுதிப்படுத்தும் ஆவணங்கள் | -மேற்படி- | -மேற்படி- |
| - | கிடைத்த விற்பனைப் பெறுமதி | 680,000,000 | கிடைத்த விற்பனைப் பெறுமதியை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் | -மேற்படி- | -மேற்படி- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| - | On SRL | 200,000,000 | பெறுமதி உறுதிப்படுத்தும் ஆவணங்கள் | 2003 ஆம் ஆண்டில் சதொச சில்லறைக் கம்பனி கலைக்கப்பட்டிருந்தது டன், இந்த மீதியில் 2003 ஆம் ஆண்டு முதல் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுகின்றது. தற்போது 18 வருடங்களுக்கு முன் இடம் பெற்ற இந்த கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான பெறுமதியை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் எதுவும் நிதிப் பிரிவிடம் காணப்படவில்லை. | பெறுமதியை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் நிதிப் பிரிவினால் பேணிச் செல்லப்பட வேண்டும். |
| - | On paddy project | 254,149,693 | பெறுமதி உறுதிப்படுத்தும் ஆவணங்கள் | இந்த மீதி சதொச சில்லறைக் கம்பனியால் அந்தக் கம்பனி கலைக்கப்பட்ட சந்தர்ப்பத்தின் போது நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு செலுத்த வேண்டிய மீதியாக இருந்ததுடன் அந்த மீதிக்காக 2003 ஆம் ஆண்டின் போது திறைசேரி பிணைமுறி விநியோகிக்கப்பட்டுள்ளது. இந்த கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான பெறுமதியை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் எதுவும் நிதிப் பிரிவில் காணப்படவில்லை என அறியத்தருகின்றோம். | -மேற்படி- |
| (iii) | நீண்டகால நிலுவை | 6,214,481 | பேரேட்டுக் கணக்கு, | இந்த ஒவ்வொரு பேரேட்டு | -மேற்படி- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வியாபார கடன்பட்டோர் மீதி | | விலைப்பட்டியல், பற்றுச்சீட்டு, இழப்புக்கான அங்கீகாரம் | கணக்குகளும் 2011 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுவதுடன், அந்த பதிவேடுகளுக்குரிய தகவல்கள் தற்போது நிதிப் பிரிவில் காணப்படவில்லை. நீண்ட காலமாக கொண்டுவரப்படுகின்ற மீதிகளை எதிர்காலத்தின் போது பதிவழிக்கும் குழுவிற்கு சமர்ப்பிப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | |
| (iv) | நீண்ட கால நிலுவை ஏனைய கடன்பட்டோர் | 170,370,348 | விலைப்பட்டியல், பற்றுச்சீட்டு, காலப்பகுப்பாய்வு, இழப்புக்கான அங்கீகாரம் | 2011 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து மாற்றமின்றி காணப்படுகின்ற கணக்கு மீதிகள் அனேகமான காலம் கணக்குகளில் காணப்படுகின்றமையால் கணக்குகளில் இருந்து பதிவழிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அந்த மீதியை உறுதிப்படுத்துவதற்கான மூல ஆவணங்கள் கணக்கு பிரிவில் காணப்படாமையாலும், அதனை அறவிடுவதற்கான இயலுமை காணப்படாதிருந்தமையாலும் கணக்கீட்டு நியமம் 36 இன் பிரகாரம் இழப்பீட்டிற்காக ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நீண்ட காலரீதியில் கொண்டுவரப்படுகின்ற மீதியை | -மேற்படி- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | எதிர்காலத்தின் போது பதிவழிக்கும் குழுவிற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | |
| (v) | ஏனைய கடன்பட்டோர் - கமட்ட சவிய செயற்திட்டம் | 42,568,994 | விலைப்பட்டியல், பற்றுச்சீட்டுக்கள் | இந்த செயற்திட்டம் 2014/2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்த ஆவணங்கள் நிதிப் பிரிவின் களஞ்சியத்தில் காணப்படுகின்றதா என பரீட்சித்து சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | உரிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (vi) | நீண்ட கால நிலுவை வாடகை கடன்பட்டோர் | 88,071,071 | பேரேட்டுக் கணக்கு, விலைப்பட்டியல், பற்றுச்சீட்டு, காலப்பகுப்பாய்வு | 2011 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து மாற்றமின்றி காணப்படுகின்ற கணக்கு மீதிகள் அனேகமான காலம் கணக்குகளில் காணப்படுகின்றமையால் கணக்குகளில் இருந்து பதிவழிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அந்த மீதியை உறுதிப்படுத்துவதற்கான மூல ஆவணங்கள் கணக்கு பிரிவில் காணப்படாமையாலும், அதனை அறவிடுவதற்கான இயலுமை காணப்படாதிருந்தமை | பெறுமதியை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் நிதிப் பிரிவினால் பேணிச் செல்லப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | யாலும் கணக்கீட்டு நியமம் 36 இன் பிரகாரம் இழப்பீட்டிற்காக ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |
| (vii) | தொடர்புடைய தரப்பினரிடமிருந்து பெறவேண்டியவை | | | | |
| - | வ/ப சதொச சில்லறை கம்பனி | 110,878,720 | பெறவேண்டிய மீதி தொடர்பான ஆவணங்கள் | 2003 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான ஆவணங்கள் தற்போது சதொச நிதிப் பிரிவில் காணப்படவில்லை. இப்பெறுமதி தொடர்பாக எதிர்காலத்தின் போது பதிவழிக்கும் குழுவிற்கு சமர்ப்பித்து அறிக்கையிட்டு கணக்குகளில் இருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| - | வ/ப லங்கா சதொச | 24,202,985 | பெறவேண்டிய மீதி தொடர்பான ஆவணங்கள் | இந்த மீதி துணைக் கம்பனிகளில் காணப்படுகின்ற நடைமுறைக் கணக்கு மீதிகளின் கீழ் லங்கா சதொச லிமிடெட் இடமிருந்து கிடைக்க வேண்டிய மீதியாக 2010 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. எங்களால் தற்போது | -மேற்படி- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | கணக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற Busy முறைமையில் 2011 ஆம் ஆண்டு முதல் பேரேட்டு கணக்குகளின் மீதிகள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டமையால் முன்னைய ஆண்டுகளின் பேரேட்டு கணக்குகள் நிதிப் பிரிவில் காணப்படாதிருந்ததுடன் அவற்றைப் பரீட்சிப்பதற்கான இயலுமை காணப்படவில்லை. அதனால் இந்த மீதி தயாரிக்கப்பட்ட முறை தொடர்பாக பதிலை வழங்குவதற்கு போதியளவான சான்றுகள் நிதிப் பிரிவில் காணப்படவில்லை. | |
| (viii) | நியதிச் சட்ட பெறவேண்டிய மீதி - தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி | 234,321,615 | பெறவேண்டிய மீதி தொடர்பான ஆவணங்கள் | இது தாபனத்தால் 2001 ஆம் ஆண்டு முதல் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்ட தேசிய பாதுகாப்பு வரியின் கூட்டுத்தொகையாகும். இந்த மீதி 2003 முதல் கணக்குகளில் வெளிப்படுத்தப்படுகின்றது. எங்களால் இது தொடர்பாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடம் விசாரணை செய்யப்பட்டுள்ளதுடன் அவர்காளால் செலுத்தப்பட்ட வரி பெறுமதியை ஈடுசெய்வதற்காக உரிய வரி பதிவேடுகள் | -மேற்படி- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | கோரப்பட்ட போதும் இது தொடர்பான எந்தவொரு பதிவேடும் நிதிப் பிரிவில் காணப்படவில்லை. | |
| (ix) | நீண்டகால நிலுவை வியாபார கடன் கொடுத்தோர் மீதி | 3,519,166 | விலைப்பட்டியல், கொடுப்பனவு விபரங்கள், காலப்பகுப்பாய்வு | இந்த மீதிகளுக்காக உரிய பட்டியல் தொடர்பான ஆவணங்கள் எதுவும் தாபனத்திடம் காணப்படவில்லை. இப்பெறுமதி தொடர்பாக எதிர்காலத்தின் போது பதிவழிக்கும் குழுவிற்கு சமர்ப்பித்து அறிக்கையிட்டு கணக்குகளில் இருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (x) | நீண்ட கால நிலுவை ஏனைய கடன் கொடுத்தோர் மீதிகள் | 187,678,063 | விலைப்பட்டியல், கொடுப்பனவு விபரங்கள், காலப்பகுப்பாய்வு | இந்த மீதி 2011 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுகின்றது. இதற்கான மூல ஆவணங்கள் கணக்கு பிரிவிடம் காணப்படாமையால் இந்த மீதியை பதிவழிக்கும் குழுவிற்கு சமர்ப்பித்து கணக்குகளில் இருந்து பதிவழிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. வில்லை. | -மேற்படி- |
| (xi) | செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரி | 187,711,507 | கணிப்பீடு செய்தல் மற்றும் செலுத்துதல் | 03 கணக்கு விடயங்களின் கூட்டுத்தொகையால் இந்த மீதி தயாரிக்கப்பட்டுள்ளது. | உரிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (xii) | ஈடுசெய்யப்பட்ட வரி செலவு | 9,000,000 | கணிப்பீடு செய்தல் | 2020 ஆம் அண்டில் ரூபா 9,000,000 தொகையொன்று உள்நாட்டு இறைவரித் திணைக்கத்திற்கு செலுத்தப்பட்டிருந்ததுடன் இந்த கொடுப்பனவுகள் 1995 – 2009 ஆண்டுகளுக்காக செலுத்த வேண்டியிருந்த போதும் செலுத்துதல்கள் புறக்கணிக்கப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான வரியாகும். 1995 – 2009 ஆம் ஆண்டுகளில் உள்நாட்டு இறைவரித் திணைக்கத்திற்கு ஆனுப்பப்பட்ட வரி அறிக்கை எதுவும் தாபனத்திடம் காணப்படாதிருந்ததுடன் இது தொடர்பாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் அனுப்பப்பட்ட ஆவணங்களின் பிரகாரம் இந்த வரித் தொகை செலுத்தப்பட்டுள்ளது. | பெறுமதியை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் நிதிப் பிரிவினால் பேணிச் செல்லப்பட வேண்டும். |
| (xiii) | வைப்புக்கள் மற்றும் முற்பணம் - நீண்டகால | 29,692,440 | வைப்பு பற்றுச்சீட்டுக்கள் | 2011 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து மாற்றமின்றி காணப்படுகின்ற கணக்கு மீதிகள் அனேகமான காலம் கணக்குகளில் காணப்படுகின்றமையால் கணக்குகளில் இருந்து பதிவழிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் | -மேற்படி- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | மேற்கொள்ளப்படும். அந்த மீதியை உறுதிப்படுத்துவதற்கான மூல ஆவணங்கள் கணக்கு பிரிவில் காணப்படவில்லை. அதனை அறவிடுவதற்கான இயலுமை காணப்படாமையினால் இழப்பீட்டிற்காக ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |
| (xiv) | ஏனைய முதலீடுகள் - சதொச சில்லறை கம்பனி | 171,928,690 | பெறுமதியை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் | இந்த மீதி 2011 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுகின்றது. இதற்கான மூல ஆவணங்கள் கணக்கு பிரிவிடம் காணப்படவில்லை. | -மேற்படி- |
| (xv) | பெற வேண்டிய வட்டிக் கணக்கில் 2018 சனவரி 01 இல் மீதி | 1,039,739 | நிலையான வைப்புக்களுக்காக வங்கியிலிருந்து கிடைத்த புதுப்பித்தல் அறிவித்தல் | இந்த கணக்கு மீதிகள் 2013 ஆம் ஆண்டின் கணக்குகளில் இருந்து கொண்டுவரப்படுகின்ற மீதியாகும். 2019 ஆம் ஆண்டிற்குரிய வட்டி பெறுவனவுகள் சரியாக சீராக்கம் செய்யப்பட்டுள்ளது. | உரிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (xvi) | விசேட செயற்திட்டத்திற் காக செலுத்த வேண்டிய மீதி ------------------------ | | | | |
| - | Crate payable | 7,731,857 | விலைப்பட்டியல், கொடுப்பனவு விபரங்கள், காலப்பகுப்பாய்வு | இந்த செயற்திட்டம் 2011 இற்கு முன்னைய ஆண்டுகளில் அமுல்படுத்தப்பட்டது. தற்போது இந்த ஆவணங்கள் நிதிப் பிரிவில் | பெறுமதியை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் நிதிப் பிரிவினால் பேணிச் செல்லப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | காணப்படவில்லை. | |
| - கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் | 19,926,051 | விலைப்பட்டியல், கொடுப்பனவு விபரங்கள், காலப்பகுப்பாய்வு | இந்த மீதி கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தால் சதொசவிற்கு 2011 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட கடன் பணமாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டு முதல் ரூபா 19,926,051 செலவு மீதியொன்று இந்த கணக்கில் காண்பிக்கப்பட்டுள்ளது. | உரிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| - Millers Payables | 47,753,691 | விலைப்பட்டியல், கொடுப்பனவு விபரங்கள், காலப்பகுப்பாய்வு | இந்த மீதியில் உள்ளடக்கப்படுகின்ற ரூபா 16,500,960 மீதி 2011 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற மீதியாகும். இந்த மீதி தொடர்பான மூல ஆவணங்கள் காணப்படாமையினால் பதிவழிப்பதற்காக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். எஞ்சிய மீதி 2011 ஆம் ஆண்டின் பின்னர் 2017 ஆம் ஆண்டு வரை பேரேட்டு கணக்குகளில் காணப்படுகின்ற மீதியாகும். இந்த மீதிகளை இணக்கம் செய்து 2021 ஆம் ஆண்டின் கணக்குகளில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுமதியை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் நிதிப் பிரிவினால் பேணிச் செல்லப்பட வேண்டும். |
| - பொதியிடல் பொருட்கள் | 10,191,665 | விலைப்பட்டியல், கொடுப்பனவு விபரங்கள், | இந்த செயற்திட்டம் 2011 ஆம் ஆண்டு முதல் 2014 வரை | -மேற்படி- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | காலப்பகுப்பாய்வு | அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன், மூல ஆவணங்கள் நிதிப் பிரிவில் காணப்படவில்லை. | |
| - | போக்குவரத்து | 5,275,761 | விலைப்பட்டியல், கொடுப்பனவு விபரங்கள், காலப்பகுப்பாய்வு | -மேற்படி- | -மேற்படி- |
| - | மீளச் செலுத்த வேண்டிய வைப்புக்கள் (Millers) | 4,605,106 | கொடுப்பனவு பற்றுச்சீட்டு | -மேற்படி- | -மேற்படி- |
| - | Other Paddy Operations | 11,523,151 | விலைப்பட்டியல், கொடுப்பனவு விபரங்கள், காலப்பகுப்பாய்வு | -மேற்படி- | -மேற்படி- |
| - | சோள செயற்திட்டம் (Maize Project) | 16,442,700 | விலைப்பட்டியல், கொடுப்பனவு விபரங்கள், காலப்பகுப்பாய்வு | இந்த செயற்திட்டம் 2016 – 2017 ஆம் ஆண்டுகளில் அமுல்படுத்தப்பட்டிருந்தது. இதன் போது CIC Grain நிறுவனத்தால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் மூலப் பிரதிகள் காணப்படாமையால் இந்த செயற்திட்டத்திற்காக நியமிக்கப்பட்ட கொடுப்பனவு குழுவினால் அந்த கொடுப்பனவுகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இதில் குறிப்பிடப்படுவது அந்த நிறுவனத்திற்கு செலுத்துவதற்கான மிகுதி தொகையாகும். இந்த செயற்திட்டத்திற்குரிய ஆவணங்களை | உரிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கணக்காய்வு பிரிவிற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| - அரிசி ஏற்றுமதி செயற்திட்டம் | 22,797,153 | விலைப்பட்டியல், கொடுப்பனவு விபரங்கள், காலப்பகுப்பாய்வு | செயற்திட்டம் 2013/2014 ஆம் ஆண்டுகளில் அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன், 2013.07.31 ஆம் திகதி தலைமை அலுவலகத்தில் ஏற்பட்டிருந்த திடீர் தீ விபத்தின் காரணமாக நிறுவனத்திற்கு சொந்தமான பழைய ஆவணங்கள் அநேகமானவை தீப் பிடித்து அழிவிற்கு உட்பட்டிருந்தது. அதன் காரணமாக இதில் குறிப்பிடப்பட்டுள்ள சில ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கான இயலுமை காணப்படவில்லை. | பெறுமதியை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் நிதிப் பிரிவினால் பேணிச் செல்லப்பட வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தாபனத்தால் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி செயற்திட்டத்தின் கீழ் 2018 ஆம் ஆண்டின் போது தனியார் கம்பனிக்கு ரூபா 436,164,234 பெறுமதியான அரிசி இருப்பு விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன், அதற்காக 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டி காணப்பட்ட ரூபா 118,011,334 தொகையை தீர்ப்பதற்காக வழங்கப்பட்ட சகல காசோலைகளும் மதிப்பிழந்திருந்தது. தாபனத்தால் கடன் | தாபனத்தால் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி இருப்பை பெற்று ரூபா 118,011,334 தொகையான மோசடி தொடர்பாக, மதிப்பிழந்த காசோலைகளை வழங்குதல் மற்றும் போலியான வங்கி பிணைமுறியை வழங்கியமை தொடர்பாக குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு முறைப்பாடு செய்யப்பட்டு அது தொடர்பாக கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு | கடன் அடிப்படையில் பொருட்களை வழங்கும் போது அறவிடும் இயலுமை தொடர்பாக உறுதிப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அடிப்படையில் அரிசி வழங்கும் போது ரூபா 100,000,000 ஆன 02 வங்கி பிணைகள் பெறப்பட்டிருந்ததுடன், அந்த பிணைகள் உண்மையான ஆவணமாக உறுதிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. மேலும், கம்பனியால் தொடர்ச்சியாக கடன் செலுத்தப்படாதிருக்கும் போதும் கம்பனிக்கு தொடர்ச்சியாக அரிசி விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் இந்த வங்கி பிணைமுறி பிழையான ஆவணமாக இருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இந்த பணத்தை செலுத்துதல் புறக்கணிக்கப்பட்டமையால் தாபனத்தால் குற்றப்புலானய்வு திணைக்களத்திற்கு முறைப்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், இது தொடர்பாக கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் வழக்கொன்று விசாரணையில் காணப்பட்டது. | தொடரப்பட்டிருந்ததுடன், கொழும்பு வணிக நீதிமன்றத்தில் சிவில் வழக்கும் இது தொடர்பாக விசாரணையில் உள்ளது. | |
| (ஆ) | இறக்குமதி செய்யப்பட்ட அரிசி விற்பனைக்காக கொள்வனவாளர்களிடம் இருந்து அறவிட வேண்டிய பணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 5,574,811 தொகை நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. கடன் அடிப்படையில் அரிசி பெற்றுக்கொண்டமை கொள்வனவாளரால் நிராகரிக்கப்பட்டதன் காரணமாக அது தொடர்பாக குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு தாபனத்தால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. | இறக்குமதி செய்யப்பட்ட அரிசி விற்பனைக்காக டப்ளியூ. ஆர் விஜித என்ற நபருக்கு எதிராக குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், அதன் பிரகாரம் விசாரணை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தற்போது வாக்குமூலம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும், டப்ளியூ. ஆர் விஜித என்ற நபருக்கு அரிசி விற்பனை மற்றும் பணம் பெற்றுக் கொள்ளல் தொடர்பாக முழுமையான கணக்காய்வு மேற்கொண்டு கணக்காய்வு அறிக்கை | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | | வழங்குமாறு குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அதன் பிரகாரம் சுயாதீன கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டு உரிய கணகக்காய்வு அறிக்கை குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | நீண்ட காலம் முழுவதும் பெறவேண்டிய வாடகையாக காண்பிக்கப்பட்ட ரூபா 88,071,071 தொகையை அறவிடுவதற்கு தாபனத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நீண்ட காலமாக கொண்டுவரப்படுகின்ற இந்த மீதிக்காக பணத்தை பெற்றுக்கொள்ளும் இயலுமை குறைவடைந்திருந்தமையால் கணக்கீட்டு நியம இலக்கம் 36 இல் வழங்கப்பட்டுள்ள ஆலோசனையின் படி இழப்பீட்டு ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது தொடர்பாக உரிய செலுத்துதல்களை மேற்கொள்ளுமாறு இந்த நிறுவனத்திற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | பெறவேண்டிய வாடகை அறவிடப்படல் வேண்டும். |
| (ஈ) | தொடர்புடைய தரப்பினரிடம் இருந்து அறவிட வேண்டிய மீதியான ரூபா 24,202,985 தொகை தாபனத்தால் மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்டிருக்கவில்லை. | இந்த மீதி துணைக் கம்பனிகளில் காணப்படுகின்ற நடைமுறைக் கணக்கு மீதியின் கீழ் லங்கா சதொச லிமிடெட்டிடம் இருந்து பெறவேண்டிய மீதியாக 2010 இன் நிதி அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் காண்பிக்கப்பட்டுள்ள மீதியை அறவிடுவதற்கான இயலுமை காணப்படாதிருந்தமையால் கணக்கீட்டு நியம இலக்கம் 36 இல் காண்பிக்கப்பட்டுள்ள படி இழப்பீட்டிற்காக ஒதுக்கங்கள் மேற்கொண்டு நிதி அறிக்கைகள் | அறவிட வேண்டிய மீதியை அறவிடுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தயாரிக்கப்பட்டுள்ளது. | |
| (உ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு லங்கா சதொச கம்பனி மற்றும் நெல் சந்தைப்படுத்தல் சபையில் இருந்து தாபனத்திற்கு அறவிட வேண்டிய தொகை முறையே ரூபா 2,290,445,474 மற்றும் ரூபா 94,059,338 ஆக இருந்ததுடன், தாபனத்தால் லங்கா சதொச கம்பனிக்கும், நெல் சந்தைப்படுத்தல் சபைக்கும் செலுத்த வேண்டிய தொகை முறையே ரூபா 89,228,614 மற்றும் ரூபா 1,000,666,192 ஆக காணப்பட்டது. இந்த அறவிட வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள் பல வருட காலம் முதல் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுவதுடன் அந்த மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு அறிக்கைத் திகதி வரையிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இறக்குமதி செய்யப்பட்ட அரிசி மற்றும் உள்நாட்டு அரிசி விற்பனைக்காக கிடைக்க வேண்டிய பணத்தை செலுத்துவதற்காக லங்கா சதொசவினால் கொடுப்பனவு திட்டமொன்று முன்மொழியப்பட்டுள்ளது. 2022.08.03 அந் திகதி வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற கூட்டத்தின் போது லங்கா சதொச இனால் 2022 செப்தெம்பர் 01 ஆந் திகதி முதல் மாதாந்தம் ரூபா 25,000,000 வீதம் 06 வருடங்களில் சதொச இற்கு செலுத்துவதற்கு இணங்கப்பட்டிருந்தது. லங்கா சதொசவினால் சதொச நிறுவனத்தில் இருந்து உள்நாட்டு அரிசியை பெற்றுக் கொள்வதற்காக கிடைக்க வேண்டிய பணம் 2022.09.01 ஆம் திகதி முதல் தவணையாக சதொசவிற்கு செலுத்துவதற்கு இணங்கப்பட்டமையால் அந்த தொகையில் இருந்து நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு செலுத்துவதற்குள்ள பணத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. மேலும் இந்த நிறுவனங்களின் மீதியை இணக்கஞ் செய்வதற்கும், அறவிடுவதற்கும் பணிப்பாளர் சபையால் ஊழியர்கள் நியிமிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களால் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என அறியத்தருகின்றோம். | உரிய நிறுவனங்களுடன் இணக்கப்பாட்டிற்கு வந்து பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகளை தீர்த்து வைத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அதன் பிரகாரம் தாபனத்தால் உரிய மீதியை அறவிடுவதற்கும், இணக்கஞ் செய்வதற்கும் தேவையான நடவடிக்கை தற்போது எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஊ) | நானாவித கடன்பட்டோரிடம் இருந்து தாபனத்திற்கு அறவிட வேண்டிய ரூபா 45,623,784 தொகை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | இதில் காண்பிக்கப்பட்டுள்ள மீதியை அறவிடுவதற்கு இயலாதிருந்தமையால் கணக்கீட்டு நியம இலக்கம் 36 இல் காண்பிக்கப்பட்டுள்ள பிரகாரம் இழப்பீட்டிற்கான ஒதுக்கீடுகள் மேற்கொண்டு நிதி அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளது. சகல கடன்பட்டோர் மீதிகளையும் அறவிடுவதற்காக பணிப்பாளர் சபை ஆலோசனையின் பிரகாரம் நிறுவனத்தில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், அவர்களினால் இந்த மீதிகளை இணக்கம் செய்து அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. செயல் முன்னேற்ற பிரிவுத் தலைவர் ஊடாக முகாமைத்துவத்திற்கு அறிக்கையிடுவதற்கு அவர்களுக்கு உரிய ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | பெற வேண்டிய பணம் அறவிடப்படல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| 1992 இன் நிதிப் பிரமாண ஏற்பாடுகளின் திருத்தத்திற்கான | உரிய நிதியாண்டிற்காக பொருள் மெய்மெய்யாய்வு பூர்த்திசெய்து அறிக்கை கணக்காய்வாளர் | 2020 ஆம் ஆண்டில் காணப்பட்ட கொவிட் நிலைமையின் கீழ் பொருள் | பொருள் மெய்மெய்யாவு நடவடிக்கைகள் சுற்றறிக்கை |

| | | | |
|---|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இன் 11.1 ஆம் பந்தி. | தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்தல் எதிர்வரும் நிதியாண்டின் மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்காக இந்த அறிக்கைத் திகதி வரையிலும் பொருள் மெய்மெய்யாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | மெய்மெய்யாய்வு நடவடிக்கைகள் குறித்துரைத்த பிரகாரம் மேற்கொள்ள முடியாதிருந்ததுடன், 2021 ஆம் ஆண்டு முதல் அந்த நடவடிக்கைகள் உரிய பிரகாரம் மேற்கொள்ளப்படும் என அறியத்தருகின்றோம். | ஏற்பாடுகளின் பிரகாரம் குறித்துரைத்த காலத்தில் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 618,975,255 நட்டமாக இருந்ததுடன் அதற்கு நோரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 1,003,047,978 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 384,072,723 அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு தாபனம் அமுல்படுத்திய உள்நாட்டு மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி செயற்திட்டங்களில் நட்டம் ரூபா 364,684,705 இனால் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 இனங்காணப்பட்ட நட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (ஆ) 2015 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட சொத்துக்களின் மீள்மதிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கூறு விலைகளை விட குறைவான சதுரஅடியின் விலை தீர்மானிக்கப்பட்டதன் காரணமாக வாடகைக்கு வழங்கப்பட்ட ஆதனங்களில் மீளாய்வாண்டில் தாபனத்திற்கு இழக்கப்பட்ட வருமானம் ரூபா 83,797,095 ஆகும். | மீள்மதிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கூறுவிலைகளுக்கு குறைவாக வழங்கப்பட்ட சில களஞ்சியங்கள்/ ஆதனங்களுக்குரிய வாடகை வாடிக்கையாளரிகளினால் அந்த களஞ்சியங்களை பழுதுபார்ப்பதற்காக தமது நிதியத்தை ஈடுபடுத்தியிருந்ததுடன், அதற்காக பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கும் மற்றும் சில ஆதனங்களுக்காக மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறே சில களஞ்சியங்கள்/ | மீள்மதிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கூறு விலைகளின் படி வாடகை அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஆதனங்கள் சதொச நிறுவனத்தின் துணைக் கம்பனியான லங்கா சதொச நிறுவனத்திற்கும் மற்றும் சதொச நிறுவனத்தின் துணை கம்பனிகளுக்காக வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. | |
| (ஆ) | தாபனத்தால் லங்கா சதொச கம்பனிக்கு வழங்கபட்ட பொருள் இருப்பு போக்குவரத்து சேவைக்காக 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்காக பெற வேண்டிய வருமானத்தில் போக்குவரத்தில் இடம்பெற்ற வழியில் ஏற்படும் பற்றாக்குறை காரணமாக பட்டியல் பெறுமதியில் ரூபா 19,299,267 வருமானம் இழக்கப்பட்டிருந்ததுடன் அது இந்த அறிக்கைத் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | லங்கா சதொச பொருள் இருப்பு போக்குவரத்திற்காக ஈடுபடுத்தப்பட்ட லொறி வண்டிகளில் ஏற்பட்ட பற்றாக்குறைக்காக பொறுப்புவாய்ந்த தரப்பினருக்கு எதிராக விசாரணை மேற்கொண்டு நட்டத்தை அறவிடுவதற்கும், ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வழியில் ஏற்படும் பற்றாக்குறையை பொறுப்புவாய்ந்த தரப்பினரிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான ஆதனங்களுக்கு இடையே வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமல் விளைவற்று காணப்பட்ட 177,036 சதுர அடி அளவாக இருந்ததுடன், 2015 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட சொத்துக்கள் மீள்மதிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட வாடகையின் பிரகாரம் இந்த கட்டிடங்கள் விளைவற்று காணப்பட்டமையால் வருடாந்தம் ரூபா 80,401,440 வருமானம் தாபனத்திற்கு இழக்கப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டில் தாபனத்திற்கு சொந்தமான ஆதனங்களை வாடகைக்கு வழங்குவதற்காக நாட்டில் காணப்பட்ட கொவிட் தொற்று நோய் நிலைமையினால் தனிமைப்படுத்தல் சட்டம், நடமாடும் வரையறை, அலுவலங்களுக்கு வருகைதரல் வரையறுக்கப்பட்டமை போன்ற காரணங்களின் அடிப்படையில் அது தொடர்பாக செயற்படுவதற்கு முடியாதிருந்ததுடன், 2021 ஆம் ஆண்டில் அந்த சொத்துக்களில் வாடகை அடிப்படையில் வழங்குவதற்காக கேள்வி கோருவதற்கு தாபனத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | தாபனத்தின் ஆதனங்களை வருமானம் உழைப்பதற்காக செயற்திறனாக ஈடுபடுத்துதல் வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற செயற்பாடற்ற வங்கி கணக்குகளில் காணப்பட்ட இனங்காணப்படாத வரவு மீதி மற்றும் கணக்குகளுக்கு இடையிலான நிதி மாற்றங்கள் உரிய பிரகாரம் முகாமை செய்யப்படாமையின் காரணமாக 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 04 வங்கி கணக்குகளில் கூட்டுமொத்தமாக ரூபா 8,510,280 வரவு மீதி வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | வங்கிக்கு வழங்கப்பட்டுள்ள ஆலோசனையின் பிரகாரம் வங்கியின் நடைமுறைக் கணக்குகளில் ரூபா 100,000 மீதியொன்று மாத்திரம் நிறுத்தி வைக்கப்பட்டு மிகுதி பணம் வங்கியில் சேமிப்பு கணக்கு இலக்கம் 2030013001 இல் வைப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 1415160701 கணக்கில் வைப்புச் செய்யப்பட்ட மொத்த தொகையில் ரூபா 100,000 மீதியொன்று நிறுத்தி வைக்கப்பட்டு மிகுதி பணம் சேமிப்பு கணக்கில் வைப்பாக இருந்ததுடன், 1415160701 கணக்கில் விநியோகிக்கப்பட்ட காசோலைகளின் பெறுமதி மாத்திரம் உள்ளடக்கப்பட்டமையால் ஒவ்வொரு தடவையும் அந்த கணக்கின் மீதி செலவு மீதியாக இருந்தது. எதிர்வரும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டத்தின் போது இது தொடர்பாக கலந்துரையாடி 2022 முதல் இந்த மீதியை சரியாக கணக்குகளில் வெளிப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். ஏனைய வங்கி கணக்கு மீதிகள் 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற செயற்பாடற்ற வங்கி கணக்குகளாக இருந்ததுடன், இந்த | செயற்பாடற்ற வங்கி கணக்குகள் தொடர்பாக உரிய வங்கிகளுடன் இணக்கப்பாட்டிற்கு வந்து தீர்த்து வைத்து வைக்க வேண்டியிருந்ததுடன், கணக்குகளுக்கு இடையிலான நிதி மாற்றங்கள் உரிய பிரகாரம் முகாமைத்துவம் செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மீதியை பதிவழிக்கும் குழுவிற்கும், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவிற்கும் சமர்ப்பித்து அது தொடர்பாக வழங்கப்படுகின்ற ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | ஹிங்குரக்கொட மற்றும் பன்னேகமுவ களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த இறக்குமதி செய்யப்பட்ட வெள்ளை அரிசி, இறக்குமதி செய்யப்பட்ட நாட்டு அரிசி, உள்நாட்டு சம்பா அரிசி மற்றும் சிவப்பு அரிசி போன்ற வகைகளுக்குரிய அரிசி கிலோ கிராம் 83,837 மீளாய்வாண்டின் போது ரூபா 4,911,230 தொகையில் விலங்கு உணவுக்காக விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன், இவ்வாறான இழப்புக்களை தடுப்பதற்காக முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | ஹிங்குரக்கொட மற்றும் பன்னேகமுவ அரிசி கட்டிட தொகுதிக்கு அண்மித்த களஞ்சியங்களில் இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் உள்நாட்டு அரிசி இருப்புக்கள் வைக்கப்பட்டிருந்ததுடன், செயற்பாட்டு நடவடிக்கைகளில் கிடைத்த இருப்புக்களின் அளவு மிகவும் கணிசமானதாகும். இந்த இருப்பு அளவுகள் களஞ்சியத்தில் காணப்பட்ட காலம், காணப்பட்ட காலநிலை தன்மை மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளின் காரணமாக அகற்றப்படுகின்ற இருப்பு மனித பயன்பாட்டிற்கு பொருத்தமற்றதாக இருந்தமையால் விலங்கு உணவிற்காக விற்பனை செய்தல் மிகவும் பயனுள்ளதாகும். | இருப்பு இழப்பினை தடுப்பதற்காக முகாமைத்துவம் கவனம் செலுத்துதல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் போது தாபனத்தின் சுத்தகரிப்பு சேவைகளுக்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்படாமல் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு ரூபா 4,230,500 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டின் விலையில் 2019 ஆம் ஆண்டின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் படி தெரிவுசெய்யப்பட்ட சுத்திகரிப்பு நிறுவனமே இதற்காகவும் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், 2019 ஆம் ஆண்டின் நிபந்தனைகளின் கீழ் சேவை பெறப்பட்டிருந்தது. | சேவை ஒப்பந்தங்கள் தொடர்பாக எழுத்து மூல உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 1969 இன் 12 ஆம் இலக்க கூட்டுறவு மொத்த விற்பனை தாபனம் (திருத்தப்பட்ட) சட்டத்தின் பிரகாரம் தாபனத்தில் கீழே குறிப்பிடப்படுகின்ற நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>(i) கூட்டுறவு சங்கங்களின் தேவையான பெறுகைகள் மற்றும் வழங்கல்கள்<br><br>(ii) சகல முறையிலும் பொருட்கள் தொடர்பாக ஏற்றுமதியாளருக்கு, இறக்குமதியாளருக்கு, மொத்த மற்றும் சில்லறை வியாபாரிகளுக்காக நடவடிக்கை எடுத்தல்.<br><br>(iii) உரிய அமைச்சர் மற்றும் நிதி விடயப் பொறுப்பு அமைச்சரின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் விவசாய மற்றும் கைத்தொழில் நடவடிக்கைகள் அல்லது வங்கி மற்றும் கடல் சார் நடவடிக்கைகளை உள்ளடக்கிய தனிப்பட்ட இன்னுமொரு வியாபார அல்லது வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ளல். | 2020 ஆம் ஆண்டில் கொவிட் தொற்று நோய் காணப்பட்டமையின் காரணமாக சதொச நிறுவனத்தின் முக்கியமான இலக்குகளுக்கு புறம்பாக அரசாங்கத்தின் கொள்கைகளை அமுல்படுத்துதல் தொடர்பில் சதொச நிறுவனம் நடவடிக்கை எடுத்திருந்தது. அதன் பிரகாரம் அத்தியாவசிய உணவுப் பொருட்களை அரசாங்க அதிபர் அலுவலகங்கள் மூலம் பகிர்ந்தளிக்கும் நிகழ்ச்சித் திட்டத்திற்காக சதொச முழுமையாக களஞ்சியம்.'. பொதியிடல்.'. போக்குவரத்து பிரிவு பயன்படுத்தப்பட்டிருந்தது. | சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுதல் வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டில் தாபனத்தின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நிதி | | |

| | | | |
|---|---|---|---|
| செயலாற்றலை கட்டியெழுப்புதல் மற்றும் நுகர்வோர் திருப்தியை அதிகரிப்பதற்காக திட்டமிடப்பட்டிருந்த கீழே குறிப்பிடப்படுகின்ற பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | | | |
| (i) | வெள்ளை சீனி மெட்ரிக் தொன் 5000, சிவப்பு பருப்பு மெட்ரிக் தொன் 3500, நெத்தலி மெட்ரிக் தொன் 1000, தகரத்தில் அடைத்த மீன் மெட்ரிக் தொன் 5400, பூண்டு மெட்ரிக் தொன் 350, கடலை மெட்ரிக் தொன் 1350 மற்றும் பயறு மெட்ரிக் தொன் 1350 நியாயமான விலையில் இறக்குமதி செய்தல். | நாட்டில் காணப்பட்ட கொவிட் தொற்று நோய் நிலைமையின் காரணமாக தாபனத்தால் இற்குமதி செய்வதற்கு எதிர்பார்த்த சிவப்பு பருப்பு, வெள்ளை சீனி, நெத்தலி, பூண்டு, தகரத்தில் அடைத்த மீன், கடலை மற்றும் பயறு என்பவற்றை இறக்குமதி செய்வதற்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. | திட்டமிடப்பட்ட பணிகளை இயலுமானவரையே னும் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | வெள்ளை சீனி மெட்ரிக் தொன் 5500 உள்நாட்டில் நியாயமான விலையில் கொள்வனவு செய்தல். | கொவிட் பரவலால் நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டம் விதித்தமை மற்றும் நடமாடும் வரையறை விதித்ததன் மூலம் அந்த ஆண்டில் இந்த செயற்திட்டத்தை வெற்றிகரமாக தொடர்ச்சியாக அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | -மேற்படி- |
| (iii) | மோட்டார் வாகன தரிப்பிட வருமான ரூபா 14.5 மில்லியனால் அதிகரித்தல். | 2020 ஆம் ஆண்டில் நாட்டில் பரவியிருந்த கொவிட் தெற்று நோயின் காரணமாக தனிமைப்படுத்தல் விதிக்கப்பட்டமை, நடமாடும் வரையரை விதிக்கப்பட்டமை போன்ற விடயங்களினால் கொழும்பிற்கு மோட்டார் வாகனங்கள் வருகை தரல் வரையறுக்கப்பட்டதன் அடிப்படையில் வருமான சதவீதத்தை அதிகரித்துக் | -மேற்படி- |

| | | |
|---|---|---|
| | கொள்வதற்கு முடியாதிருந்தது. | |

### 3.4 விளைவற்ற அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் தாபனத்திற்கு சொந்தமாக 109 வாகனங்கள் காணப்பட்டதுடன், அதில் 21 வாகனங்கள் ஓட்டத்தில் இருந்து அகற்றப்பட்டு வருடம் முழுவதும் விளைவற்று காணப்பட்டது. | 2020 ஆம் ஆண்டில் 109 வாகனங்கள் காணப்பட்ட போதிலும், அதில் 11 வாகனங்கள் கேள்வி கோரல் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளது. மேலும் 10 வாகனங்கள் கேள்வி கோரல் மூலம் அகற்றுவதற்காக ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டுள்ளது. | விற்றுத் தீர்ப்பதற்கு எதிர்பார்த்துள்ள வாகனங்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் விரைவாக தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) தாபனத்திற்கு சொந்தமான ஹிங்குராங்கொட மற்றும் பன்னேகமுவ அரிசி தயாரிக்கும் கட்டிடத் தொகுதியில் பலவருட காலம் முதல் குறைவாக பயன்படுத்தப்படுவதுடன், அரிசி தொகுதி இரண்டிலும் மணித்தியாலத்திற்கு 2000 கிலோ கிராம் அரிசி வீதம் தயாரிக்கும் இயலுமையுடன் காணப்படுகின்றது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது பன்னேகமுவ அரிசி தயாரிக்கும் கட்டிடத் தொகுதியில் 372,800 கிலோ கிராம் அரிசி மாத்திரம் உற்பத்தி செய்யப்பட்டிருந்தது. மேலும் அந்த கட்டிடத் தொகுதியில் மீளாய்வாண்டின் போது 13 முதல் 21 ஊழியர்கள் வரையான எண்ணிக்கையில் அங்கு சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் சம்பளம், மேலதிக நேரம் மற்றும் ஏனைய படிகளாக ரூபா 10,948,807 செலுத்தப்பட்டிருந்தது. | இந்த இரண்டு தொகுதிகளுக்காகவும் நெல் சந்தைப்படுத்தும் சபையிலிருந்து நெல் இருப்புக்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், அவர்கள் கையில் காசுக்கு மாத்திரம் நெல் இருப்பு விநியோகித்தலை மேற்கொள்கின்றனர். அதன் பிரகாரம் 2020 ஆம் ஆண்டில் நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு சொந்தமாக காணப்பட்ட நெல் இருப்பு வரையறுக்கப்பட்டிருந்ததுடன், அந்த இருப்புக்கள் சதொச இற்கும் மற்றும் தனியார் துறைகளுக்கும் ஒரே தடவையில் விநியோகிக்கப்பட்டிருந்தது. அதன் போது சதொசவிற்கு அந்த காலத்தில் பெற முடியுமாக இருந்து வரையறுக்கப்பட்ட நெல் இருப்பு அளவு மாத்திரம் குத்துவதற்கு வேண்டி ஏற்பட்டிருந்தது. மேலும் சதொச நேரடியாக நெல் இருப்பை | தாபனத்தின் ஆதனங்களை வருமானம் உழைப்பதற்காக செயற்திறனாக ஈடுபடுத்துதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஹிங்குரக்கொட அரிசி தயாரிக்கும் கட்டிடத் தொகுதியில் மீளாய்வாண்டின் போது 06 பதவியணியினர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக சம்பளம், மேலதிக நேரம் மற்றும் ஏனைய படிகளாக ரூபா 2,902,590 செலுத்தப்பட்டிருந்தது. அதில் மீளாய்வாண்டில் அரிசி கிலோ கிராம் 309,550 மாத்திரம் உற்பத்தி செய்யப்பட்டிருந்தது. | கொள்வனவு செய்யாதிருந்ததுடன், விவசாயிகளிடம் இருந்து பிரதானமாக ஈரலிப்புக்களுடன் நெல் உற்பத்தியாகின்றமையினால் மற்றும் அந்த நெல் இருப்புக்களை கொள்வனவு செய்து குத்துவதற்காக சில மாதங்கள் களஞ்சியத்தில் வைப்பதற்கும் தேவையான நெல் உலர்த்தும் வசதிகள் சதோசவிற்கு சொந்தமாக இல்லாதிருந்ததையும் அறியத்தருகின்றோம். மேலும் இரண்டு தொகுதிகளுக்காகவும் பாதுகாப்பு பிரிவுகளை உள்ளடக்கிய சதோச ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | |

## 3.5 செயற்திட்டத்தை அமுல்படுத்துதல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் அமுல்படுத்தப்பட்ட விஷேட கொவிட் செயற்பாட்டு திட்டத்தின் கீழ் கொவிட் தொற்று நோய் நிலைமையில் நுகர்வோர்களுக்கு வழங்குவதற்காக ரூபா 666,559,566 கிரயமான 3,302,968 தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் டின்கள், ரூபா 233,985,325 கிரயமான சிவப்பு பருப்பு கிலோ கிராம் 1,691,725 தொகை, ரூபா 48,790,557 கிரயமான பெரிய வெங்காயம் கிலோ கிராம் 375,158 மற்றும் ரூபா 5,652,104 கிரயமாக உருளைக் கிழங்கு கிலோ கிராம் 30,858 மற்றும் கிரயம் ரூபா 10,531,320 ஆன பூண்டு கிலோ கிராம் 23,560 உம் கொள்வனவு | | |

செய்யப்பட்டிருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| (i) | உரிய கொள்வனவுக்காக பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.3.1(அ) வழிகாட்டியின் பிரகாரம் முறையான மதிப்பீடு மற்றும் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.6 வழிகாட்டியின் பிரகாரம் மாதிரிகள் என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சின் பெறுகைக் குழுவின் மூலம் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு வழங்குனர்களிடம் இருந்து கூறுவிலைகளை பெற்றுக்கொள்ளல் அந்த குழுவினால் மேற்கொள்ளப்பட்டது. நாடு முழுவதும் காணப்பட்ட தனிமைப்படுத்தல் சட்ட நிலைமையின் அடிப்படையில் கொள்வனவு செய்தல் மற்றும் பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகள் மிகவும் கஷ்டமாக இருந்தமையினால் உரிய பெறுகைகள் நிறுவனத்தின் மூலம் இந்த மாதிரிகள் அல்லது மதிப்பீடுகள் இன்றி பெறுகைகளைச் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 6.2(இ) வழிகாட்டியின் பிரகாரம் கேள்வி கோருவதற்காக வழங்கப்பட்டுள்ள காலம் உரிய கேள்வி தயாரிப்பதற்காக நியாயமானதாக போதியளவாக இருக்க வேண்டிய போதிலும், தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் டின்கள் மற்றும் பருப்பு இனை கொள்வனவு செய்வதற்காக வழங்குனர்களுக்கு | தனிமைப்படுத்தல் சட்ட நிலைமையில் வழங்குனர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ளுதல் கஷ்டமாக இருந்தமை, நாட்டில் உணவுப் பற்றாக்குறை ஏற்படுவதை தவிர்ப்பதற்காக மாவட்ட செயலாளர்களுக்கு விரைவாக அத்தியாவசிய உணவுப் பொருட்களை பகிர்ந்தளிக்க வேண்டியிருந்தமை போன்ற நடைமுறை ரீதியான கஷ்டங்கள் இதற்காக தாக்கமளித்திருந்தது. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | கூறுவிலைகள் சமர்ப்பிப்பதற்காக 30 நிமிட காலம் மாத்திரம் வழங்கப்பட்டதன் காரணமாக போட்டியாளர் விலைகளை பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது. | | |
| (iii) | உணவுப் பொருட்களை பகிர்ந்தளித்தல் பிரதேச, மாவட்ட செயலகங்கள் மூலம் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் தாபனத்தால் தனியார் கம்பனிக்கு 100,000 தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் டின்கள் விற்பனை செய்யப்பட்டிருந்தது. அதற்குரிய ரூபா 9,286,000 ஆன தொகை பொதுத் திறைசேரியினால் தாபனத்திற்கு மீளளிப்புச் செய்தல் நிராகரிக்கப்பட்டிருந்தது. | முப்படைகளுக்கும் உணவுப் பொருட்களை வழங்குபவர்களுக்கு முப்படைகளின் தேவைக்காக பகிர்ந்தளிப்பதற்காக இந்த தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் டின்கள் 100,000 வழங்கப்பட்டிருந்தது. இந்த செயற்பாடுகள் தொடர்பாக பணிப்பாளர் சபையிடமும் விடயங்கள் விசாரிக்கப்பட்டுள்ளதுடன், முன்னாள் அமைச்சின் செயலாளர் பொலிஸ் மா அதிபருக்கு இது தொடர்பாக முறைப்பாடு செய்துள்ளதுடன், இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினாலும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | பொது திறைசேரியில் இருந்து செலவினங்களை மீளளிப்பு செய்யக் கூடிய வகையில் உரிய நிபந்தனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | கொள்வனவு செய்யப்பட்ட பெரிய வெங்காயம் கிலோ கிராம் 4,108, உருளைக் கிழங்கு கிலோ கிராம் 6,050 மற்றும் பூண்டு கிலோ கிராம் 445.5 என்பன பயன்பாட்டிற்கு பொருத்தமற்றதன் காரணமான அழிக்கப்பட்டிருந்ததுடன், அந்த பொருட்களின் மொத்த கிரயம் ரூபா 1,830,171 ஆகும். | இந்த செயற்திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட மொத்த பொருள் இருப்பின் பெறுமதி அண்ணளவாக ரூபா 1135 மில்லியன் ஆகும். 03 மாதங்கள் ஆன குறுகிய காலத்தில் இவ்வாறான கணிசமான பொருள் இருப்பொன்று தனிமைப்படுத்தல் சட்டத்தின் பின்புல செயற்பாடுகளின் போது இந்த இழப்பீட்டிற்கு உட்பட்ட உணவுப் பொருட்கள் | இருப்பு இழப்பீட்டை குறைப்பதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அழிக்கப்பட்டிருந்தது. | |
| (v) | கொள்வனவு செய்யப்பட்ட பெரிய வெங்காயம் கிலோ கிராம் 375,158 இல் கிலோ கிராம் 363,633 விற்பனை செய்யப்பட்டுள்ளதுடன், கிலோ கிராம் 4,108 அழிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கிலோ கிராம் 7,417 இழப்பொன்று அவதானிக்கப்பட்டதுடன் , உருளைக் கிழங்கு கிலோ கிராம் 30,858 இல் கிலோ கிராம் 23,513 விநியோகிக்கப்பட்டிருந் தது. அதனிடையே கிலோ கிராம் 6,050 அழிக்கப்பட்டிருந்ததுடன் , கிலோ கிராம் 1,295 இழப்பு அவதானிக்கப்பட்டது, அவ்வாறே செயற்திட்டத்தின் கீழ் தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் டின்கள் 3,302,968 கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அதில் 3,302,491 மீன் டின்கள் விற்பனை செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 477 மீன் டின்களில் இழப்பு அவதானிக்கப்பட்டது. கணக்காய்வின் கணிப்பீட்டின் பிரகாரம் மேற்கூறப்பட்ட இழப்புகளின் காரணமாக தாபனத்திற்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 1,303,880 ஆகும். | மிகவும் குறுகிய காலத்தில் மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் மூலம் விரைவாக வழங்குமாறு சமர்ப்பிக்கப்பட்ட கட்டளைக்காக உணவு ஆணையாளரால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கை தனிமைப்படுத்தல் சட்டத்தின் பின்புலத்தில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது இந்த நிலைமை ஏற்பட்டிருந்ததை அவதானிக்கின்றோம். | இழப்புகளை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (vi) | பொதியிட்டு மீண்டும் பெற்றுக் | 2020 மார்ச் 17 ஆம் திகதி 2167/9 ஆம் இலக்க | பொது திறைசேரியில் |

| | | | |
|---|---|---|---|
| | கொள்வதற்காக லங்கா சதொச கம்பனியால் தாபனத்திற்கு வழங்கப்பட்ட சிவப்பு பருப்பு கிலோ கிராம் 15,250 தாபனத்தால் மேற்கூறப்பட்ட செயற்திட்டத்தின் கீழ் ரூபா 65 இற்கு நுகர்வோர்களுக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது. எனினும், அதற்காக 01 கிலோ கிராம் இற்கு ரூபா 128 வீதம் லங்கா சதொச கம்பனிக்கு செலுத்த வேண்டி கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்டிருந்தது. கொவிட் செயற்திட்டத்தின் கீழ் சலுகை விலைகளில் இந்த கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளாமையின் காரணமாக கிலோ கிராம் ஒன்றிக்காக மேலதிகமாக செலுத்தப்பட்ட ரூபா 63 தொகை பொதுத் திறைசேரியினால் மீளளிப்பு செய்யப்படாமையின் காரணமாக ரூபா 960,750 நட்டத்தை ஏற்பதற்கு தாபனத்திற்கு ஏற்பட்டிருந்தது. | வர்த்தமானி பத்திரத்தின் பிரகாரம் அந்த சந்தர்ப்பத்தின் போது மைசூர் பருப்பு (சிவப்பு பருப்பு) விற்பனை செய்யக் கூடிய ஆகக் கூடிய சில்லறை விலை கிலோ கிராம் 01 இற்கு ரூபா 65 மாத்திரம் ஆகும். லங்கா சதொச நிறுவனத்தினாலும் இந்த பருப்பு இருப்பு அந்த சந்தர்ப்பத்தின் போது விற்பனை செய்யப்பட்டிருக்குமாயின் ஆகக் கூடிய சில்லறை விலை ரூபா 65 மாத்திரம் ஆகும். அதன் பிரகாரம் சதொச நிறுவனத்தில் இருந்து மேலதிகமாக அறவிடல் லங்கா சதேச நிதிப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட தவறான செயற்பாடாகும். அது தொடர்பாக எங்களால் எதிர்ப்பு தெரிவித்து கடிதம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | இருந்து செலவினங்களை மீளளிப்பு செய்யக் கூடிய வகையில் உரிய நிபந்தனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | அமைச்சின் நிதி ஏற்பாட்டின் கீழ் 2019 ஆம் ஆண்டின் போது தாபனத்திற்கு சொந்தமான 13 களஞ்சியங்களை நவீனமயப்படுத்துதல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், நவீனமயப்படுத்துவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 72,356,234 செலவிடப்பட்டிருந்தது. அந்த சகல நவீனமயப்படுத்தல் | முன்னைய அமைச்சின் கீழ் காணப்பட்ட வரவு செலவு திட்ட நிதி ஏற்பாட்டு பணம் புதிய அமைச்சுக்கு பெற்றுக் கொள்வதற்காக நீண்ட காலம் எடுத்தமையின் காரணமாக ஒப்பந்தகாரருக்கு பணம் செலுத்துதல் நீண்டகாலம் தாமதமடைந்தமை. இந்த நிலைமையில் அளவிடைப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட | திட்டமிடப்பட்ட பணிகள் குறித்துரைத்த காலத்தில் நிறைவேற்றப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| செயற்பாடுகளும் 2020 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 06 களஞ்சிகளின் நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. | விலை மட்டமும் பொருளாதார ரீதியில் அதிகரித்தமை, செயற்திட்டத்திற்கு பொறுப்பாக செயற்பட்ட கம்பனியின் பொறியியலாளர் கைது செய்யப்பட்டமை, அந்த கம்பனிக்காக பணிப்பாளர் சபையொன்று நியமித்ததில் தாமதம் ஏற்பட்டமை மற்றும் முன்னாள் பிரதான நிறைவேற்று மற்றும் பிரதான பொறியியலாளர் நீக்கப்பட்டமை, நாட்டில் விரைவாக பரவிச் சென்ற கொவிட் - 19 வைரஸ் தொற்று நோய் போன்ற விடயங்களின் காரணமாக இந்த செயற்திட்டத்தின் வேலை மேற்பார்வைகளும் பிரச்சினைக்குரிய நிலைமைக்கு உட்பட்டிருந்தது. எனினும் தற்போது இந்த 13 களஞ்சியங்களில் 09 களஞ்சியங்களின் நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | |

### 3.6 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது தாபனத்தின் வாகனங்களுக்காக டயர், டியூப் மற்றும் கொலர் தொகுதிகள் 100 இனை கொள்வனவு செய்வதற்காக பெறுகைகள் குழுவினால் இலங்கை அரச வணிக (நானாவித) கூட்டுத்தாபனத்தில் இருந்து கொள்வனவு செய்வதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. எனினும் பெறுகைகள் குழுவின் பரிந்துரைக்கு முரணாக ரூபா 5,531,240 செலவில் 100 உபகரண தொகுதிகள் மேற்கூறப்பட்ட பெறுகைகள் செயற்பாடுகளில் கூறுவிலை சமர்ப்பிக்காத தனியார் நிறுவனம் | பெறுகைகள் குழுவின் அங்கீகாரத்தின் படி சதொசவினால் கொள்வனவு கட்டளையொன்று இலங்கை அரச வணிக (நானாவித) கூட்டுத்தாபனத்திற்கு அனுப்பப்பட்ட போதும் அந்த நிறுவனத்தால் இந்தக் கட்டளைக்குரிய டயர் விநியோகிக்க முடியாதிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. அதனால் பெறுகைகள் | பெறுகைகள் குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்த முடியாத சந்தர்ப்பத்தின் போது மீண்டும் பெறுகைகள் குழுவின் பரிந்துரைகளைப் பெற்று அதன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஒன்றிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | வழிகாட்டியின் (9.2) 9.2.1 பிரிவின் பிரகாரம் போக்குவரத்து உதிரிப்பாகங்களுக்குரிய தேசிய உள்நாட்டு முகவர் நிறுவனங்களில் இருந்து கொள்வனவு செய்வதற்கான இயலுமை உள்ளதனால் எப்பளோ மாதிரியில் டயர்/டியூப் மற்றும் கொலர் உள்நாட்டு ரீதியில் வழங்குகின்ற ஒரே ஒரு நிறுவனமான ஐடியல் வீல்ஸ் என்ட் டயர்ஸ் (தனியார்) கம்பனியில் இருந்து கூறுவிலை பெறப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | |

## 3.7 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தாபனத்தின் முகாமைத்துவ உதவியாளர் பதவிகள் 37 அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் உள்ளபடியான பதவியணியினர் 23 ஆகும். அலுவலக உதவியாளரில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 120 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணியினர் 114 ஆகும். முகாமைத்துவ உதவியாளர் பதவிகளின் எண்ணிக்கை போதியளவாக இல்லாமையின் காரணமாக முக்கியமாக நிர்வாகரீதியான மற்றும் நிதிரீதியான விடயங்களில் அலுவலக உதவியாளர் பதவிகளை வகிக்கின்ற ஊழியர்களினால் மேவுகை செய்யப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டில் கொவிட் 19 பரவலால் அரசாங்கத்தால் தனிமைப்படுத்தல் சட்டம் விதித்தமை, நடமாடும் வரையறை விதித்தமை போன்ற காரணங்களினாலும், அரச அலுவலகங்களில் அத்தியாவசிய ஊழியர்கள் மாத்திரம் அழைக்கப்பட்டிருந்தமையாலும் ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்கு முடியாதிருந்ததுடன் தற்போது ஊழியர்களைச் சேர்க்கும் அரசாங்கத்தின் கொள்கைத் தீர்மானததின் அடிப்படையில் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது. | முக்கியமாக நிர்வாகரீதியான மற்றும் நிதிரீதியான விடயங்களில் தகைமை பெற்ற உத்தியோகத்தர்களின் மூலம் நிறைவேற்றுதல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் தாபனத்தின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்குரிய நிதிக் கூற்றுக்கள் 21 மாதங்கள் தாமதத்தின் பின்னர் 2022 நவம்பர் 22 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் வரைவு ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். தாபனத்தின் துணைக் கம்பனியான சதொச நிர்மாணம் மற்றும் பொறியியல் கம்பனியின் 2017, 2018, 2019 ஆம் ஆண்டுகளுக்குரிய நிதிக் கூற்றுக்கள் தயாரித்து ஒன்றிணைந்த கணக்குகளை தயாரிப்பதற்கு ஒரு வருட அளவிலான தாமதம் ஏற்பட்டிருந்தமையால் தாபனத்தின் நிதிக் கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு தாமதம் ஏற்பட்டிருந்தது என அறியத்தருகின்றோம். 2020 ஆம் ஆண்டின் கணக்காய்வு முடிவடைந்த பின்னர் 2021 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு அனுப்பப்படுவதுடன் 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களையும் 2023 ஆம் ஆண்டின் போது கணக்காய்விற்கு அனுப்புவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2023 ஆம் ஆண்டு முதல் குறித்துரைத்த திகதியில் நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |